வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 12.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை புதுடெல்லியில், சிவில் விமான போக்குவரத்து தொடர்பான, இரண்டாவது ஆசியா-பசிபிக் அமைச்சர்கள் நிலை மாநாட்டில் பங்கேற்றுள்ளார்.

பாரீஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில், 29 பதக்கங்களை வென்ற திரும்பி உள்ள இந்திய வீரர்-வீராங்கனைகளை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் சந்தித்து, கலந்துரையாடினார்.

பெண்களிடையே சுய சார்பை அதிகரிப்பதில், அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சிபிஎம் பொதுச் செயலர் சீதாராம் யெச்சூரி, புதுடெல்லி எயிம்ஸ் மருத்துவமனையில் இன்று காலமானார்.

மோடி 1 (17)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை புதுடெல்லியில், சிவில் விமான போக்குவரத்து தொடர்பான, இரண்டாவது ஆசியா-பசிபிக் அமைச்சர்கள் நிலை மாநாட்டில் பங்கேற்றுள்ளார். பிராந்தியத்தின் சிவில் விமான போக்குவரத்து துறையை, புதிய உயரங்களுக்கு இட்டுச் செல்வதற்கான செயல் திட்டம் குறித்து, உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்து ஏற்கும் டெல்லி பிரகடனத்தை அவர் அறிவிக்கிறார்.

மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு நேற்று இம்மாநாட்டை தொடக்கி வைத்தார். 2035 ஆம் ஆண்டிற்குள், ஆண்டுக்கு மூன்றரை பில்லியன் பயணிகளை கையாள ஏற்றதாக, ஆசியா-பசிபிக் பிராந்தியத்தின் சிவில் விமான போக்குவரத்துக் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில், முதலீடுகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

உலகிலேயே மிக வேகமாக வளரும், சிவில் விமான போக்குவரத்துச் சந்தையாகவும், உள்நாட்டு அளவிலான விமானப் பயணிகளின் எண்ணிக்கையில், உலகின் 3 ஆவது பெரிய நாடாகவும், இந்தியா திகழ்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் விமானங்களின் எண்ணிக்கை 2 மடங்காகவும், விமான நிலையங்களின் எண்ணிக்கை,

74-ல் இருந்து, 157 ஆகவும் அதிகரித்துள்ளது. உடான் போன்ற அரசுத் திட்டங்கள் மூலம், பிராந்திய அளவிலான விமான சேவை இணைப்புகள் அதிகரித்து இருப்பதும், தொலைதூரப் பகுதிகள், விமான சேவைக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளம் குறிப்பிடத் தக்கது.

*மோடி பாராலிம்பிக்ஸ்* (8)

பாரீஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில், 7 தங்கம், 9 வெள்ளி உட்பட சாதனை அளவில், 29 பதக்கங்களை வென்ற திரும்பி உள்ள இந்திய வீரர்-வீராங்கனைகளை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் உள்ள தமது இல்லத்தில் சந்தித்து, கலந்துரையாடினார். பதக்கம் வென்ற வீரர்கள் மற்றும் இதர பங்கேற்பாளர்களுக்கு அவர் வாழ்த்து தெரிவித்துக் கொண்டார். மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, இந்திய பாராலிம்பிக்ஸ் கமிட்டியின் தலைவர் திரு தேவேந்திர ஜஜாரியா ஆகியோரும், இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*ராஜ்நாத் 1* (18)

உலக அளவில் உருவாகி வரும் சவால்களை கருத்தில் கொண்டு, நட்புறவு நாடுகள் தங்களுக்கு இடையிலான கூட்டாண்மையை, புதிய உயரங்களுக்கு இட்டுச் செல்ல வேண்டும் என பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். இன்று ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில், தரங் சக்தி எனும் பாதுகாப்பு வான் சாகச நிகழ்ச்சியை அவர் பார்வையிட்டுப் பேசுகையில், பிணக்குகளும், போட்டிகளும் நிறைந்த இன்றைய உலகில், ஒற்றுமையும், ஒன்றாக வளர்வதுமே இந்தியாவின் குறிக்கோள் என்றார்.

பாதுகாப்புத் துறைக்கு தேவையான ஆயுதங்கள், தளவாடங்கள் மற்றும் போர் விமானங்களை உள்நாட்டிலேயே தயாரிப்பதில் இந்தியா முக்கிய வளர்ச்சி கண்டுள்ளதாகவும், குறிப்பாக, இலகுரக விமானங்கள், ரேடார் கருவிகள், தொலை உணர்வு சாதனங்கள், மற்றும், மின்னனுப் போர் முறைகளில் சுய சார்பை நோக்கி முன்னேறி வருவதாகவும் அவர் தெரிவித்தார். இந்தியாவில் இருந்து 90 நாடுகளுக்கு, பாதுகாப்பு உபகரணங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் கூறினார். பாதுகாப்பு அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், இந்தியா, மற்றும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், ஐக்கிய அரபு எமிரேட்டுகள், மற்றும் சிங்கப்பூர் விமானப் படையை சேர்ந்த போர் விமானங்கள் பல்வேறு வான் சாகசங்களில் ஈடுபட்டு, தங்களின் திறனை

*ராஜ்நாத்* 2 (8)

வெளிப்படுத்தின. பங்கேற்பு நாடுகள் இடையே, பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்தி, பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது. இந்நிகழ்ச்சியின் மற்றொரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, I-DAX என்னும் பாதுகாப்பு வானூர்தி கண்காட்சியையும் பாதுகாப்பு அமைச்சர் திறந்து வைத்தார். பாதுகாப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பல்வேறு பொதுத் துறை

நிறுவனங்களும், தனியார் மற்றும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களும் இக்கண்காட்சியில் பங்கேற்றுள்ளன.

*ஆயுதம் பறிமுதல் (7)*

வடக்கு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் இன்று பாதுகாப்பு படையினரும், ஜம்மு காஷ்மீர் போலீசாரும் இணைந்து மேற்கொண்ட, கூட்டு நடவடிக்கையின் போது, பெருமளவிலான, ஏகே-47 துப்பாக்கி ரவைகள், கையெறி குண்டுகள், மற்றும் வெடிகுண்டுகள் கைப்பற்றப் பட்டன. ஜம்மு காஷ்மீரில் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ள, சிறப்பு தேர்தல் பார்வையாளர் ஒருவர் கொடுத்த புலனாய்வு தகவலின் பேரில், இந்த கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக, பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*சுற்றுலா போட்டி (17)*

நாட்டில் மக்களால் அதிகம் விரும்பப்படும் சுற்றுலா தலங்களை இனம் காணும் வகையில், மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள தேக் அப்னா தேஷ்- மக்கள் தேர்வு போட்டிக்கான ஆன்-லைன் வாக்களிப்பு நடைமுறைகளில் பொதுமக்கள் வரும் 15 ஆம் தேதி வரை பங்கேற்று வாக்களிக்கலாம் என அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆன்மீக சுற்றுலா, கலாச்சார மரபுச் சுற்றுலா, இயற்கை சுற்றுலா, வனவிலங்கு

சுற்றுலா, மற்றும், சாகச சுற்றுலா ஆகிய 5 பிரிவுகளில், சுற்றுலா தலங்கள் பற்றிய மக்களின் கருத்துக்களை புரிந்து கொள்ளும் நோக்கத்துடன் இப்போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது அல்லாது, இதர சுற்றுலா தலங்கள் என்ற பிரிவிலும் பொதுமக்கள், தங்களுக்கு பிடித்த இடங்களுக்கு வாக்களிக்கலாம் என்றும், இதனால், இதுவரை அதிகம் அறியப்படாத சுற்றுலா தலங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வர ஏதுவாகும் என்றும் சுற்றுலா அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மார்ச் மாதம் ஸ்ரீநகரில், இந்த முன்-முயற்சியை தொடக்கி வைத்தார். மாநிலங்களின் சிறந்த சுற்றுலா தலங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதில் இந்த வாக்கெடுப்பு உதவிகரமாக இருக்கும் என்று அவர் கூறினார்.

*நிர்மலா* (15)

பெண்களுக்கு கண்ணியமான வாழ்க்கை அமைத்துக் கொடுத்து சாதனையாளர்களாக மேம்படுத்தும் வகையில், பெண்களிடையே சுய சார்பை அதிகரிப்பதில், அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். இன்று கோவையில் நலத்திட்ட உதவிகளின் ஒரு பகுதியாக தையல் இயந்திரங்களை பெண்களுக்கு வழங்கி பேசிய அவர், கோவை பகுதியை

சேர்ந்த சுமார் 2 லட்சம் பெண்கள், பிரதமரின் ஜீவன் ஜோதி திட்டத்தில் சேர்ந்திருப்பதாக தெரிவித்தார். நாட்டில் 60 சதவிகித பெண்கள் தங்களுக்கென வங்கிக் கணக்கு தொடக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஜன்-தன், முத்ரா மற்றும் ஸ்டார்ட்-அப் திட்டங்கள் மூலம் நாட்டின் அனைத்து பிரிவு மக்களின் நலனையும் மேம்படுத்த மத்திய அரசு அயராது பாடுபட்டு வருவதாக நிதியமைச்சர் கூறினார். குறிப்பாக, பெண்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலத்தை மேம்படுத்துவதன் மூலம், நாட்டின் வளர்ச்சியை உறுதிப் படுத்தும் அணுகுமுறை ஒன்றை அரசு கடைபிடித்து வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

*சீதாராம் யெச்சூரி* (6)

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலர் சீதாராம் யெச்சூரி, புதுடெல்லியில் இன்று காலமானார். 72 வயதான அவர், நிமோனியா போன்ற நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு, கடந்த மாதம் 19 ஆம் தேதி முதல், புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். தீவிர சிகிச்சை பிரிவில், சுவாச கருவிகள் பொருத்திய நிலையில், அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. சீதாராம் யெச்சூரியின் உடல், வரும் சனிக்கிழமை புதுடெல்லியில் உள்ள சிபிஎம் தலைமையகத்தில், பொதுமக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின்னர், அவரது விருப்பப்படி,

எய்ம்ஸ் மருத்துவமனையின் ஆராய்ச்சி தேவைகளுக்கு தானமாக வழங்கப்படும் என்றும் கட்சி அறிவித்துள்ளது.

குறை தீர்ப்பு (8)

புதுச்சேரியில் மாதம் தோறும் 15 ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்ப்பு கூட்டம், இம்மாதம் 15 ஆம் தேதி விடுமுறை தினத்திற்கு பதிலாக, வரும் 16 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணி அளவில், வழுதாவூர் சாலையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் கலந்தாய்வுக் கூடத்தில் நடைபெற உள்ளது. பொதுமக்கள் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கள் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜிப்மர் (4)

மிலாது நபி அரசு விடுமுறை காரணமாக, வரும் 17 ஆம் தேதி புதுச்சேரி ஜிப்மரில், வெளி நோயாளிகள் சிகிச்சை பிரிவு இயங்காது என ஜிப்மர் நிர்வாகம் அறிவித்துள்ளது. அன்றைய தினம், அவசர சிகிச்சை பிரிவுகள் வழக்கம் போல் செயல்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*காரைக்கால்* (9)

வரும் 27 ஆம் தேதி உலக சுற்றுலா தினத்தை ஒட்டி, காரைக்கால் மாவட்டத்தில், சுற்றுலா துறையும், மாவட்ட நிர்வாகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 3 நாள் விழாவை சிறப்பாக நடத்துவது குறித்து, காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன், சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தினார். கலை-கலாச்சார நிகழ்ச்சிகள், மற்றும் பல்வேறு போட்டிகளை நடத்துவது குறித்தும், சுற்றுலா தலங்களை தூய்மைப்படுத்துதல், மற்றும், குடிநீர், கழிவறை, பாதுகாப்பு உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தி தருவது குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப் பட்டது.

*காரைக்கால் ஊட்டசத்து* (9)

தேசிய ஊட்டச் சத்து மாதத்தின் ஒரு பகுதியாக காரைக்கால் அக்கம்பேட்டை அங்கன்வாடி மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சத்தான உணவுகள் குறித்தும், காய்கறிகள் மற்றும் பழங்களின் மகத்துவம் குறித்தும் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. இயற்கை உணவுகள் குறித்து குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை அதிகாரி திருமதி காஞ்சனா விளக்கம் அளித்தார். ஆரோக்கியமான குழந்தைகள் தேர்ந்தெடுக்கப் பட்டு

பரிசு வழங்கப் பட்டது. பல்வேறு பகுதிகளை சேர்ந்த அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*ஏனாம்* (10)

ஆந்திரா மற்றும் ஒடிசாவில் பெய்த கனமழை காரணமாக கோதாவரி ஆற்றில் கடந்த 3 நாட்களாக வெள்ளப் பெருக்கு அதிகரித்து இருப்பதால், ஏனாமில், பிரான்ஸ்திப்பா, தரியல்திப்பா, கனகாலபேட் உள்ளிட்ட தாழ்வான பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டன. பொதுப்பணித் துறையினர் பம்ப்புகள் மூலம், மழை நீரை வெளியேற்றி, ராஜீவ்நகர், ஜி.எம்.சி பாலயோகி நகர் உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் புகுவதை, திறம்பட்ட முறையில் கட்டுப்படுத்தினர். புதுச்சேரி அரசின் டெல்லி பிரதிநிதி திரு மல்லாடி கிருஷ்ணாராவ், மண்டல நிர்வாக அதிகாரி திரு முனுசாமி ஆகியோர் வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டதாக எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

*வானிலை* (11)

தமிழகத்தில் இன்றும் நாளையும் அதிகபட்ச வெப்ப நிலை, ஓரிரு இடங்களில், இயல்பை விட, 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக பதிவாகலாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்ப நிலை மற்றும் ஈரப்பதம் அதிகமாகும் போது, ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக வரும் 18 ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, நாகை மாவட்டம் வேளாங்கன்னியில், 4 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

ஆயுஷ் (12)

மத்திய ஆயுஷ் துறை அமைச்சகம் தனது 3 ஆம் கட்ட சிறப்பு இயக்கத்தின் கீழ், பொதுமக்களின் ஆயிரத்து 300 க்கும் மேற்பட்ட குறைகளுக்கு தீர்வு கண்டுள்ளது. பணியிடங்களில் தூய்மையை பராமரித்து மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த இயக்கம் மேற்கொள்ளப் பட்ட இந்த இயக்கத்தின் போது, ஏற்கனவே, நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்ட 18 வாக்குறுதிகள், மற்றும், நாடாளுமன்ற உறுப்பினர்களால் அனுப்பி வைக்கப் பட்ட 33 பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. அடுத்தபடியாக, 4 ஆம் கட்ட சிறப்பு இயக்கத்திற்கு ஆயுஷ் அமைச்சகம் தயாராகி வருவதாகவும், அனைத்து

அலுவலர்களுக்கும் உறுதி மொழி செய்து வைப்பதன் மூலம், தூய்மையான, கழிவு பொருட்களே இல்லாத இந்தியாவை உருவாக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அமைச்சக வட்டாரங்கள் கூறியுள்ளன.

*பால் வளம்* (13)

மத்திய கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங், நாளை, ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில், கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத் துறை பற்றிய மழைக் காலக் கூட்டத்தை, தலைமை ஏற்று நடத்துகிறார். கால் நடை பராமரிப்பு மற்றும் பால் வளம் தொடர்பான பல்வேறு திட்டங்களின் அமலாக்கத்தை மறு ஆய்வு செய்து தேவையான திருத்தங்களை கொண்டு வருவது குறித்தும், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் எதிர்பார்ப்புகளை கேட்டறிந்து, ஒருங்கிணைப்பான முறையில் திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்படும். மத்திய கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத் துறையின் 100 நாள் செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக, பல்வேறு முக்கிய அறிவிப்புகள் இக் கூட்டத்தில் வெளியிடப் பட்டு, வேறு பல செயல்பாடுகளும் தொடக்கி வைக்கப்படும் என அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை புதுடெல்லியில், சிவில் விமான போக்குவரத்து தொடர்பான, இரண்டாவது ஆசியா-பசிபிக் அமைச்சர்கள் நிலை மாநாட்டில் பங்கேற்றுள்ளார்.

பாரீஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில், 29 பதக்கங்களை வென்ற திரும்பி உள்ள இந்திய வீரர்-வீராங்கனைகளை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் சந்தித்து, கலந்துரையாடினார்.

பெண்களிடையே சுய சார்பை அதிகரிப்பதில், அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சிபிஎம் பொதுச் செயலர் சீதாராம் யெச்சூரி, புதுடெல்லி எயிம்ஸ் மருத்துவமனையில் இன்று காலமானார்.